# உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்தியா ஆகியன வழங்கும் கடன் நிதிகளின் கீழ் 2022/23 பெரும்போகத்தில் நெற் பயிர்ச் செய்கைக்கு இரசாயன உரங்களை விநியோகிப்பது பற்றிய வழிகாட்டல்

**உள்ளடக்கம்**

**பக்க இலக்கம்**


| | | | |
|---|---|---|---|
| | சுருக்கக் குறியீடுகள் | - | ii |
| | பின்னிணைப்புகள் | - | iv |
| 1. | அறிமுகம் | | 1 |
| 2. | உரங்களை பெறல் மற்றும் உறையிலிடுதல் | - | 1 |
| 3. | உரங்களை விநியோகித்தல் | - | 2 |
| 4. | விவசாயிகள் மீது இலக்குக்கொள்ளல் | - | 3 |
| 5. | மானியங்கள், விலை நிர்ணயம் மற்றும் வருமான சேகரிப்பு | - | 4 |
| 6. | ஆலோசனைகள், தொடர்பாடல்கள், தகவல் வெளிப்படுத்துகை மற்றும் விஸ்தரிப்பு என்பன பற்றிய செய்திகள் | - | 5 |
| 7. | மனக்குறை நிவாரண பொறிமுறை (GRM) | - | 5 |
| 8. | சுற்றாடல் பாதுகாப்புகள் | - | 6 |
| 9. | உரக் களஞ்சியக் கையாளுகை மற்றும் ஏற்றிச்செல்லல் | - | 7 |
| 10. | உரங்கள் பாவனை பற்றிய வழிகாட்டல்கள் | - | 7 |
| 11. | கண்காணிப்பும் மற்றும் மதிப்பீடும் | - | 8 |

**சுருக்கக் குறியீடுகள்**

| | | |
|---|---|---|
| உவ | - | உலக வங்கி |
| ஆஅவ | - | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| MOP | - | மியுரேட்டுப் பொட்டாசியம் |
| தேஉசெ | - | தேசிய உர செயலகம் |
| இநிகநி | - | இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் |
| BL | - | உரங்கள் இறக்கல் செலவு |
| கஅ | - | கமத்தொழில் அமைச்சு |
| துஅசக | - | துறைமுக அதிகார சபை கட்டணம் |
| இஉகூ | - | வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம் |
| கொவஉகூ | - | வ/ப கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனம் |
| கசேநி | - | கமநல சேவை நிலையங்கள் |
| ஆநா | - | ஆணையாளர் நாயகம் |
| கஅதி | - | கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| பநா | - | பணிப்பாளர் நாயகம் |
| விதி | - | விவசாயத் திணைக்களம் |
| கஅ | - | கமக்காரர் அமைப்பு |
| விஆஉஉ | - | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் |
| விஆ | - | விவசாய ஆலோசகர் |
| கிஉ | - | கிராம உத்தியோகத்தர் |
| உவிஅ | - | உணவு மற்றும் விவசாய அமைப்பு |
| கபிஉ | - | கமநல பிராந்திய உத்தியோகத்தர் |
| மநிபொ | - | மனக்குறை நிவாரண பொறிமுறை |
| பிஆ | - | பிரதி ஆணையாளர் |

| | | |
|---|---|---|
| உஆ | - | உதவி ஆணையாளர் |
| பிசெ | - | பிரதேச செயலாளர் |
| சுபாஅ | - | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் |
| சிவிசெ | - | சிறந்த விவசாய செயன்முறைகள் |
| பிவிகு | - | பிராந்திய விவசாயக் குழு |
| மாவிகு | - | மாவட்ட விவசாயக் குழு |

**பின்னிணைப்புகள்**

| | | |
|---|---|---|
| பின்னிணைப்பு 1 | - | அரசாங்கத்திற்கு சொந்தமான உரக் கூட்டுத்தாபனங்களின் களஞ்சியக் கொள்திறன்கள் |
| பின்னிணைப்பு 2 | - | அரசாங்க உரக் கூட்டுத்தாபனங்களுக்கான வாகனத் தேவைப்பாடும் மற்றும் உரங்கள் ஏற்றிச்செல்லல் திட்டமும் |
| பின்னிணைப்பு 3 | - | அரசாங்கத்திற்கு சொந்தமான உரக் கூட்டுத்தாபனங்களுக்கு தேவையான மனித மணித்தியாலங்கள் |
| பின்னிணைப்பு 4 | - | உரங்கள் விநியோக கால அட்டவணை |
| பின்னிணைப்பு 5 | - | அரசாங்கத்திற்கு சொந்தமான உரக் கூட்டுத்தாபனங்கள் உரங்களை ஏற்றிச்செல்வதற்கு தேவையான எரிபொருள் |
| பின்னிணைப்பு 6 | - | விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் உர சிபாரிசு |
| பின்னிணைப்பு 7 | - | உரங்கள் பாவனை மாதிரிப்படிவம் |
| பின்னிணைப்பு 8 | - | உரக் கொள்வனவு பற்றுச்சீட்டு |
| பின்னிணைப்பு 9 | - | கிராம உத்தியோகத்தர் சிபாரிசு மாதிரிப்படிவம் |

## 1. அறிமுகம்

1.1. 2022/23 பெரும்போகத்தில் நெற் பயிர்ச் செய்கை நிமித்தம் விவசாயிகளுக்கு இரசாயன உரங்களையும் மற்றும் சேதன உரங்களையும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1.2. அபிவிருத்திக் கருத் திட்டங்களுக்கு என இலங்கைக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடன் நிதிகளைப் பயன்படுத்தி இரசாயன உரங்கள் இறக்குமதிக்கு நிதி அளிக்கப்படும். இந்த இரசாயன உரங்களை கொள்வனவு செய்வதற்கு சர்வதேச போட்டி கேள்விமனு நடைமுறை பின்பற்றப்படும்.

1.3. அதற்கிணங்க, யூரியா உரத்தை இறக்குமதி செய்ய 110 மில்லியன் ஐஅ டொலர்கள் ஒரு உலக வங்கிக் (உவ) கடனாக பயன்படுத்தப்படும். மேலும் மியுரேட்டுப் பொட்டாசியத்தை (MOP) இறக்குமதி செய்ய 40 மில்லியன் டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆஅவ) வழங்கியின் கடன் நிதிகளிலிருந்து செலவுசெய்யப்படும். வட்டி நீங்கலாக இந்தக் கடன் தொகையின் மீள்கொடுப்பனவுப் பெறுமானம் 54 பில்லியன் ரூபாவாகும். மீளச்செலுத்தப் படும் பொறுப்பேற்க வேண்டிய விலை, அந்த நேரத்தில் காணப்படுகின்ற ரூபா நாணய மாற்றுப் பெறுமான அடிப்படையில் படிப்படியாக நிர்ணயிக்கப்படும். மேலும், இந்திய நிரல் கடன் வசதியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு உரக் களஞ்சியசாலைகளில் ஏலவே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள யூரியா உரங்கள் முதலாவது பாவனைக்காக பயன்படுத்தப் படும்.

1.4. இது, அரசாங்கத்திற்கு அதிக செலவு என்பதால் உரப் பெறுகை முதல் விவசாயிகளுக்கு உரம் கையளிக்கப்படும் வரையான அனைத்து நடவடிக்கைகளிலும் அதிக கவனத்தை செலுத்த வேண்டும்.

1.5. எதிர்வரும் பயிர்ச்செய்கைப் போகத்தில் இரசாயன உரங்களின் பகிர்ந்தளிப்பு மற்றும் பாவனை பற்றிய விபரம், இந்த செயற்பாட்டிற்கு பொறுப்புடைய சகல தரப்புகளினதும் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு, இந்த வழிகாட்டலில் தரப்பட்டுள்ளது.

## 2. உரங்களை பெறல் மற்றும் உறையிலிடுதல்

### 2.1. இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரங்கள்

2.1.1. விநியோகத் தரப்புகள் கேள்வி மனுவில் கையொப்பமிட்டு சமர்ப்பித்த உடன் கேள்வி மனு ஆவணத்திலுள்ள ஒப்பந்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏற்புடையதாகும். துறைமுகத்தில் உரம் இறக்கல் மதிப்பாய்வை மேற்கொள்வதற்கு இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்திலிருந்து (இநிகநி) 1720 ISO தர நியம சான்றிதழை பெற்ற ஒரு சுயாதீன உர இறக்கல் துறைமுக முகவர்நிலையத்தையும் மற்றும் உரத்தின் தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள உரத்தை சோதனையிடுவதற்கு 17025 ISO தர நியம சான்றிதழை பெற்ற ஒரு பகுப்பாய்வு முகவர்நிலையத்தையும் (கேள்வி மனு ஆவணத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு) இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்தின் (இநிகநி) ஆலோசனையை பெற்று தேசிய உர செயலகம் (தேஉசெ) பெயர்குறித்து நியமிக்கும்.

2.1.2. சகல பகுப்பாய்வுகளும் இநிகநி நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவுதிறன்களின் வரையறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், உரங்கள் வந்திறங்கும் துறைமுகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் உர மாதிரிகள் நேரடியாக, தேஉச பணிப்பாளர் பெயர்குறித்து பணிக்கின்ற பகுப்பாய்வு ஆய்வுகூடங்களில் பரிசோதனையின் நிமித்தம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறித்த சுயாதீனப் பகுப்பாய்வு முகவர்நிலையம் இநிகநி நியமங்களுக்கு இணங்க பெறுபேறுகளை உறுதிசெய்த உடன், கமத்தொழில் அமைச்சினால் (கஅ) கேள்வி மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கப்பற்சரக்குகள் அட்டவணையின் பிரகாரம், விநியோகத் தரப்பு

உர இறக்கல் செலவுப்பட்டியலையும் (உஇசெ) உரம் வந்தடையும் துறைமுகத்திற்கு உரிய கப்பற்சரக்கு செலவையும் கோரலாம்.

2.1.3. உரம் விடுவிக்கப்படும் துறைமுகத்திற்கு உர கப்பற்சரக்கு கிடைத்த உடன், அந்த விடுவித்தல் சம்பந்தமான விடயங்கள் கொள்வனவுத் தரப்பினால் ஒழுங்குசெய்யப் படுதல் வேண்டும். அதற்கிணங்க, துறைமுக அதிகார சபை கட்டணங்கள் (துஅசக), கப்பற்சரக்குக் கட்டணங்கள், சுங்கக் கட்டணங்கள், உறையிடுதலுக்கான செலவுகள், ஏற்றல் இறக்கல் செலவுகள் மற்றும் உரம் வந்தடையும் துறைமுகத்திலிருந்து வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம் (இஉகூ)/வ/ப கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத் தாபனம் (கொவஉகூ) மற்றும் கமநல சேவை நிலையங்கள் (கசேநி) என்பவற்றுக்கு எடுத்துச் செல்வதற்கான செலவுகள் என்பன பொருத்தமானவாறு கொள்வனவுத் தரப்பினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## 2.2. இரசாயன உரங்களை எடுத்துச்செல்லல்

### 2.2.1. முதல் கட்டம் - உரம் வந்தடையும் துறைமுகத்திலிருந்து இஉகூ, கொவஉகூ ஆகியவற்றின் பிரதான உரக் களஞ்சியசாலைகளுக்கு எடுத்துச்செல்வதற்கான ஒழுங்குகள்

துறைமுகத்திலிருந்து லொறிகளுக்கு ஏற்றப்படும் உர உறைகள் (50 கிகி) இஉகூ / கொவஉகூ களஞ்சியசாலைகளுக்கு எடுத்துச்செல்லப்படுதல் வேண்டும். மொத்த உர அளவில், இஉகூ மற்றும் கொவஉகூ அவற்றின் கொள்திறன்களின் அடிப்படையில் முறையே அவை 60% உரத்தையும் 40% உரத்தையும் கையாளும்.

அரசாங்கத்திற்கு சொந்தமான ஒவ்வொரு உரக் கூட்டுத்தாபனத்தினதும் களஞ்சியக் கொள்திறன்கள் (பின்னிணைப்பு 1), தேர்ந்தெடுத்த இடங்களுக்கு உரங்களை எடுத்து செல்வதற்கான வாகனத் தேவைப்பாடுகள் (பின்னிணைப்பு 2), தேவையான மனித மணித்தியாலங்கள் (பின்னிணைப்பு 3) மற்றும் உர விநியோக கால அட்டவணை (பின்னிணைப்பு 4) தேவையான எரிபொருள் விபரங்கள் (பின்னிணைப்பு 5) என்பன இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

### 2.2.2. இரண்டாம் கட்டம் - கால வரையறைகள் அடங்கலாக உரங்களை உரக் களஞ்சிய சாலைகளிலிருந்து கசேநி வரை எடுத்துச்செல்வதற்கான ஒழுங்குகள்

உரம் பிரதான களஞ்சியசாலையிலிருந்து அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உரக் கூட்டுத்தாபனங்களுக்கும் உரிய பிராந்திய களஞ்சியசாலைகளுக்கு அல்லது நேரடியாக கசேநி நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்படுதல் வேண்டும். விரிவான உரம் ஏற்றிச்செல்லல் திட்டம் (பின்னிணைப்பு 2) தேஉசெ பணிப்பாளரினதும் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் (கஅதி) ஆணையாளர் நாயகத்தினதும் (ஆநா) இணக்கப்பாட்டுடன் அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உரக் கூட்டுத் தாபனங்களினாலும் விநியோகிக்கப்படும். உர விநியோகத் திட்டம் விதி, இஉகூ, கொவஉகூ, கஅதி என்பவற்றின் இணைத்தளங்களில் மேலேற்றம் செய்யப்படும்.

# 3. உர பகிர்ந்தளிப்பு

3.1. 2000 இன் 46 ஆம் இலக்கக கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு விவசாயி பற்றிய எல்லா விபரங்களையும் கசேநி ஊடாக பேணி இற்றைப்படுத்துவது கஅதி இன் பொறுப்பாகும். அதற்கிணங்க, உரங்களை பகிர்ந்தளிக்க முன்னர் நன்மைபெறுநர்களின் பட்டியல் கஅதி இன் இணையத்தளத்திற்கு மேலேற்றம் செய்யப்படும். பால்நிலையின் அடிப்படையில் ஏதாவது பாரபட்சமில்லாமல் சமமான வெளிப்படையான ஒரு வித்தில் உர பகிர்ந்தளிப்பை உறுதிசெய்வது இதன் நோக்கமாகும். முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற

நபர்கள் அல்லது நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டுள்ள நோயாளிகள் போன்ற பாதிக்கக் கூடிய மக்கள் மீது விஷேட கவனம் செலுத்தப்படும். உர பகிர்ந்தளிப்பு ஆரம்பிக்கப்படும் போது, ஊணமுற்ற மற்றும் நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டுள்ள விவசாயிகளின் பட்டியல் கசேநி இல் கிடைக்கச்செய்யப்படுதல் வேண்டும்.

3.2. உரத்தின் தேவை விவசாயத் திணைக்களத்தின் (விதி) பணிப்பாளர் நாயகத்தினது (பாநா) சிபாரிசுகளின் அடிப்படையில் (பின்னிணைப்பு 6) நிர்ணயிக்கப்படும். உரங்கள் கசேநி மூலம் விநியோகிக்கப்படும்.

3.3. கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அவற்றின் கசேநி/கமக்காரர் அமைப்புகளில் (கஅ) உள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் உரிய உர அளவு விநியோகிக்கப்படும். அது தவிர உரங்களை பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொறுப்பு கசேநி களுக்கு இணைக்கப்பட்டுள்ள கள உத்தியோகத்தர்களுக்கு உரியதாகும். மேலும், இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகொள்ளக்கூடிய விபரங்களின் ஊடாக கஅதி ஐ தொடர்புகொண்டு விசாரித்து மேலும் அதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

3.4. கஅதி, மகாவலி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பவற்றினது ஏற்பாடுகளின் கீழ் கமக்காரர் அமைப்புகள் (கஅ) தாபிக்கப்படும். சமுதாயப் பங்கேற்பு, சமூகக் கணக்காய்வு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிசெய்துகொள்ள கூடிய வகையில் விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிப்பதற்கு உரிய கஅ சிபாரிசு அவசியமாகும். ஒவ்வொரு பயிர்ச்செய்கைப் போகம் ஆரம்பமாகுவதற்கு முன்னர், கள மட்டத்திலான தகவல்களை பெற்றுக் கொள்ளும் முகமாக இந்த கஅ களுடன் அந்தந்த அரசாங்க அதிகாரிகள் மூலம் பயிர்ச்செய்கை கூட்டங்கள் அழைக்கப்பட்டு நடத்தப்படும்.

3.5. தகுதியான விவசாயி பின்னிணைப்பு 7 இல் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்க உரத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பம் கஅதி இணையத்தளத்தில் கிடைக்கச்செய்யப்படும் அல்லது இதனை விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரிடம் (விஆஉஉ) இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3.6. இது தவிர, இந்தப் பெரும்போகத்தில், விவசாயிகள் அவர்களின் உரத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான செயற்பாடுகளின் நிமித்தம் தேஉர மற்றும் கசேநி என்பவற்றுக்கு ஒன்லைனில் விண்ணப்பித்து உண்மையான கால தரவுகளை பெற்றுக் கொள்ளும் வகையில் தேசிய உர முகாமைத்துவ தரவு முறைமை திட்டமிடப்பட்டவாறு ஒரு முன்னோடிக் கட்டமாக செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

## 4. விவசாயிகள் மீது இலக்குக்கொள்ளல்

4.1. உரங்கள் கசேநி மற்றும் கஅ ஆகியன பரஸ்பர ரீதியில் உடன்பட்டுள்ள கசேநி களில் அல்லது வேறொரு இடத்தில் விநியோகிக்கப்படும். திகதியும் நேரமும் கஅ களின் ஊடாக கசேநி மூலம் அறிவிக்கப்படும். விஆஉஉ களுக்கு உரத்தை கொள்வனவு செய்தமைக்கு ஒரு பற்றுச்சீட்டு (பின்னிணைப்பு 8) விநியோகிக்கப்படும். உரம் விநியோகிக்கப்படும் இடத்திலிருந்து விவசாயிகளின் கிராமங்களுக்கு உரங்களை எடுத்துச்செல்வதற்கான உதவியும் ஒருங்கிணைப்பும் ஆகுசெலவு பயனுள்ள விதத்தில் கஅ, கஅதி மற்றும் கசேநி கள உத்தியோகத்தர் மூலம் வழங்கப்படும். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், கஅ ஆல் விவசாயிகளிடமிருந்து ஏற்றியிறக்கல் செலவுக் கட்டணத்தை அறவிடுவதாகவிருந்தால், அதன் நிமித்தம் கஅதி ஆநா இன் வழிகாட்டல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு ஒரு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். உரங்கள் குறித்த பிரதேசத்தின் முழு மொத்த நெற் பயிர்ச்செய்கை அளவுக்கு என முன்னர் நிர்ணயித்த விலையில் கசேநி இன் மூலம் விநியோகிக்கப்படும்.

4.2. குறைந்த வருமானம்/பாதிப்புக்குள்ளாகக் கூடிய குழுக்கள் அடங்கலாக விவசாயிகளுக்கு கஅதி இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கமநல வங்கியின் மூலம் ஒரு கடன் திட்டம் ஏற்பாடு

செய்யப்படும். அது தவிர, 0.2 ஹெக்டேயர் அளவான காணிகளில் பயிர் செய்துள்ள மிகப் பாதிப்புக்குள்ளாகக்கூடிய சிறுபற்றுநில நெல் விவசாயிகளுக்கு அவர்களின் விவசாய உற்பத்திக் கொள்திறன்களை மேலும் வலுப்படுத்திற்கொள்ளக் கூடிய வகையில் யூரியா உரத்தை வழங்குவதற்கு கஅ இலங்கையில் அதிகம் பாதிக்கக்கூடிய மாவட்டங்களில் (பின்னிணைப்பு 9) பொருத்தமான கருத் திட்டத்தை செயற்படுத்தும்.

4.3. இது வரையில் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்படாத விவசாயிகள் தமது உரங்களுக்காக விண்ணப்பிக்கும் போது தமது தகவல்களை தரவுத் தளத்தில் உள்ளீர்த்து இற்றைப்படுத்தி கொள்ளலாம். எனினும், அவ்வாறு செய்ய முன்னர், உரிய கமக்காரரிடமிருந்து ஒரு உர விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் அந்த விவசாயி உரத்தைப் பெற்றுக் கொள்ள தகுதியுடையவரா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் முகமாக 'உர பகிர்ந்தளிப்பு' பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குழுவிடமிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

## 5. மானியங்கள், விலைநிர்ணயம் மற்றும் வருமான சேகரிப்பு

5.1. பாநா/கஅதி 2022/23 பெரும்போகத்திற்கு நெற் பயிர்ச்செய்கையின் நிமித்தம் சிபாரிசு செய்த அளவில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள உரங்கள் அரசாங்கம் நிர்ணயித்த விலையில் தகுதியுடைய விவசாயிகளுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்படும்.

5.2. **இரசாயன உரங்களின் விலைநிர்ணயம்**

5.2.1. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு இரசாயன உர உறையை (50 கிகி) நெற் பயிர்ச்செய்கை நிமித்தம் மானியமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விலை நிர்ணயிக்கப் பட்டு அறிவிக்கப்படும்.

5.2.2. எனினும், அந்தத் தீர்மானத்தை எடுத்த நேரத்தில், மூன்று வகை பிரதான உரங்களின் சர்வதேச சந்தை விலைகள் ஒப்பீட்டளவில் அதிகமாக காணப்பட்டன. அதற்கிணங்க, இறக்குமதி விலை குறைவடைந்தால், உரங்கள் அதிகளவான விலைகளில் தனியார் சந்தையில் விற்பனை செய்யப்படுவதால் நிகழக்கூடிய சாத்தியமான ஊழலையும் மோசடியையும் தடுக்கவும், உரங்களின் மேலதிகப் பாவனையை தடுக்கவும் வேண்டி இருப்பதால் இரசாயன உரங்களுக்கு மானியங்களை வழங்குவது பொருத்தமற்ற விடயமாகும். அரசாங்கம் இந்த செயன்முறையின் நிமித்தம் செலவு செய்த மொத்தத் தொகை விலைத் தொகுப்பின் போது கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். உர மானியம் கிடையாதிருக்குமாயின், ஆகக்கூடிய சில்லறை விலை 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபை சட்டத்தின் கீழ் அதிவிஷேட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

5.3. **யூரியா உர விலைநிர்ணயம்**

5.3.1. 2022/23 பெரும்போகத்திற்கான யூரியா உரம், உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 50 கிகி நிறையுடைய ஒரு யூரியா உறை 10,000.00 ரூபா விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

5.3.2. விவசாயிகள் கஅதி இன் பாநா இன் சிபாரிசின் பிரகாரம் தமக்குரிய உர அளவுகளை தத்தமது கசேநி களில் அல்லது கஅ இற்கு சொந்தமான வேறொரு இடத்தில், பொறுப்புடைய விஆஉஉ அல்லது கசேநி இன் கமநல பிராந்திய உத்தியோகத்தர் (கபிஉ) பெயர்குறித்த அலுவலர் முன்னிலையில் கொள்வனவு செய்யலாம்.

5.3.3. இங்கு இணைக்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டு மாதிரிப்படிவத்தின் பிரகாரம் உரங்களை கொள்வனவு செய்தமைக்கான ஒரு பற்றுச்சீட்டு விவசாயிக்கு வழங்கப்படும். அந்தப் பற்றுச்சீட்டு பொறுப்புடைய விஆஉஉ அல்லது நியமிக்கப்பட்ட வேறொரு அலுவலர் மூலம் உரக் கண்காணிப்பு முறைமையினுள் மேலேற்றம் செய்யப்படும்.

5.4. **MOP விலைநிர்ணயம்**

5.4.1. அதற்கிணங்க, பெறுகையின் பின்னர் உடனடியாக, ஒவ்வொரு வகை இரசாயன உரத்தினதும் விலை பிரசுரிக்கப்படும்.

5.5. **இரசாயன உர வருமான சேகரிப்பு**

5.5.1. அந்தந்த கசேநி களின் சகல கமநல பிராந்திய உத்தியோகத்தர்களினாலும் உர வருமானம் சேகரிக்கப்படும். சேகரித்த வருமானத் தொகை உவ, ஆஅவ நிதிகளின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் அளவுகளுக்கு, நாளாந்தம் பி.ப. 3.00 மணியளவில் அரசுக்கு சொந்தமான அந்தந்த உரக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட வேண்டும். அரசுக்கு சொந்தமான இரண்டு உரக் கூட்டுத்தாபனங்களும் அவற்றுக்கு கிடைத்த வருமானத் தொகையை, கஅ இற்கும் ஒரு பிரதி சகிதம் வாரத்திற்கு ஒரு தடவை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு மாற்ற வேண்டும்.

## 6. ஆலோசனைகள், தொடர்பாடல்கள், தகவல் வெளிப்படுத்துகை மற்றும் விஸ்தரிப்பு என்பன பற்றிய செய்திகள்

6.1. உரப் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் பற்றி ஒவ்வொரு கட்டத்திலும் பின்வரும் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

i. கமக்காரர் அமைப்புகளின் மாதாந்தக் கூட்டம்
ii. கமநல சேவை குழுக் கூட்டம்
iii. விஆஉஉ வாராந்தக் கூட்டம்
iv. கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டம்
v. விவசாய ஆலோசகர்களின் மாதாந்தக் கூட்டம்
vi. ஏனைய பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சி / கருத் திட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டம்
vii. அரசாங்க உரக் கூட்டுத் தாபனப் பிராந்திய மற்றும் விடயத்திற்குப் பொறுப்புடைய முகாமைத்துவ உதவியாளர்களின் மாதாந்தக் கூட்டம்
viii. பிராந்திய விவசாயக் குழுக் கூட்டம்
ix. மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம்
x. கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்களின் மாதாந்தக் கூட்டம்
xi. விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் மாகாண விவசாயப் பணிப்பாளர்களுடன் நடத்தப்படும் கூட்டம்
xii. பயிர்ச் செய்கைப் போகங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
xiii. நீர்ப்பாசன அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
xiv. மகாவலி அபிவிருத்தித் திட்டக் குழுக் கூட்டம்
xv. மாவட்ட உர செயற்பாட்டுக் குழுக் கூட்டம்

6.2. உரப் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டம் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் முகமாக இலங்கை அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்றது. நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு பொறுப்புடைய உரிய அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும், எதிர்பார்த்த இலக்குகளை அடைய வேண்டும். பாலியல்சார் சுரண்டல், துஷ்பிரயோகம் /பாலியல் துன்புறுத்தல் மற்றும் விளைவுகள் என்பவற்றுக்கு பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை உறுதிசெய்வதற்கும் அதே போல் வலுவான நிறுவனங்களுக்கும், அமைதிக்கும், நீதிக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் எந்த ஊழலிலும் அவர்கள் ஈடுபடாமல் இருப்பதற்கும் தாபன விதிக்கோவையின் பிரிவு II இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அவர்களின் நடத்தை சார்ந்த விதிமுறைகளை அவர்கள் கடைபிடிக்க வேண்டும்.

6.3. உர பகிர்ந்தளிப்பு பற்றிய பின்னூட்டல் பொறிமுறை கஅதி மூலம் செயற்படுத்தப்படும். உரப் பாவனை பற்றிய பின்னூட்டல் பொறிமுறை விதி மூலம் செயற்படுத்தப்படும்.

## 7. மனக்குறை நிவாரண பொறிமுறை (GRM)

7.1. உரம் சரியான நேரத்தில், சரியான அளவில், சரியான நபருக்கு சரியான விலையில் விநியோகிக்கப்படுவது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். மேலும், உரப் பகிர்ந்தளிப்பு சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படாததால், இந்த செயன்முறையில் இது வரை அதிக மனக்குறைகள் ஏற்பட்டுள்ளன. உரங்களை சரியான நேரத்தில் கமநல அபிவிருத்திப் பிரிவுகளுக்கு கொண்டுவரும் பொருட்டு உறுதிசெய்வதை இங்கு முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

7.2. அத்தகயை மனக்குறைகளை கசேநி மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் மற்றும் தேசிய மட்டத்திலும் அழைத்து பதிவுசெய்யும் பொருட்டு ஒரு பொறிமுறை செயற்படுத்தப்படுதல் வேண்டும். ஆகையால், மனக்குறைகளை பதிவுசெய்யும் புத்தகம்/அவற்றை சேகரிக்கும் பெட்டி ஒவ்வொரு கசேநி அலுவலகத்தின் முன்னரங்கில் பொதுமக்களுக்கு தெளிவாகத் தென்படக்கூடிய ஒரு இடத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.

7.3. அத்தகைய ஏதாவது மனக்குறைகள் கிடைத்தவுடன், கஅஉ தலைமை வகிக்கும் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய குழு கூடி வாரத்தில் மூன்று வேலை நாட்களுக்குள் உடனடியாக அந்தப் பிரச்சினைகளை தீர்த்துவைக்க வேண்டும்.

1. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் (தலைவர்)
2. உரிய கசேநி இற்கு இணைக்கப்பட்டுள்ள கஅ இன் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. குறித்த பிரிவுடன் தொடர்புடைய ஒரு விவசாய ஆலோசகர்
4. ஒரு விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்
5. கஅ இன் தலைவர் அல்லது உரிய கஅ இன் தலைவர் நியமித்த பிரதிநிதி ஒருவர்

7.4. இந்தக் குழுவிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விடயம் தொடர்பாக நடத்தப்பட்ட புலனாய்வு அறிக்கை பதிவுசெய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு கசேநி இற்கும் கிடைத்த சகல மனக்குறைகள் தொடர்பான ஒரு மாதாந்த சுருக்க அறிக்கையும் அந்த மனக்குறைகளின் நிமித்தம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையும் கஅ இற்கு ஒரு பிரதி சகிதம் CG, DAD மற்றும் செயலாளர் ஆகியோருக்கு விதி மாவட்டப் பிரதி ஆணையாளர் (பிஆ) /உதவி ஆணையாளர் (உஆ) ஊடாக CG, DAD ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கஅ மனக்குறைகளைக் கையாளும் பொருட்டு ஒரு மத்திய குழுவை நியமிக்க வேண்டும். மேலும், மனக்குறைகளை தெரியப்படுத்துவதற்கான ஹொட்லைன் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பனவும் DAD ஆல் பெற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும். இவை ஊடகத்தின் ஊடாக அறிவிக்கப்படுதலும் மற்றும் கசேநி களில் பதாகைகளின் மூலம் காட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

7.5. மேற்குறித்த பிராந்தியக் குழுவின் தீர்மானத்தில் அதிருப்தி அடையும் தரப்புகள் அந்தந்த பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளருக்கு (பிசெ) தமது முறைப்பாடுகளை அனுப்பி வைக்க வேண்டும். பிராந்திய விவசாயக் குழு வாரத்தின் மூன்று வேலை நாட்களுக்குள் அத்தகைய முறைப்பாட்டை விசாரித்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

7.6. பிராந்திய விவசாய உரக் குழுவில் பின்வரும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்குவார்கள்.

1. பிசெ அல்லது பிசெ (தலைவர்) அதிகாரம் அளித்த உதவிப் பிரதேச செயலாளர்
2. பிரதேச செயலாளர் பெயர்குறிக்கும் எவரேனும் பிற தகவுடைய அதிகாரி
3. சம்பந்தப்பட்ட கமக்காரர் அமைப்பின் வதிவிட/பயிர்ச்செய்கைப் பிரிவு கிராம உத்தியோகத்தர் (கிஉ)

7.7. அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் தலைமை வகிக்கும் மாவட்ட உரக் குழு அத்தகைய பிரச்சினைகளைக் கையாண்டு தீர்த்துவைக்க வேண்டும்.

7.8. மாவட்ட உரக் குழுவில் பின்வரும் அதிகாரிகள் உள்ளடங்குவார்கள்.
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதி/உதவி கமநல அபிவிருத்தி ஆணையாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், தேசிய உர செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்
இவர்கள் தவிர, மாகாணப் பிரிவுகளுக்கு இடையிலான பிரதி விவசாயப் பணிப்பாளரும் மகாவலி வலைய முகாமையாளர்களும் மாகாணப் பிரிவுகளுக்கு இடையிலான குழுவில் உறுப்பிர்களாக இருக்க வேண்டும்.

## 8. சுற்றாடல் பாதுகாப்புகள்

### 8.1. உர விநியோகத்திற்கு முன்னரும் மற்றும் உர விநியோகத்தின் போதும்

8.1.1. உரக் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட உரம் எடுத்துச்செல்லப்பட்டு இஉகூ மற்றும் கொவஉகூ ஆகியவற்றின் உரக் களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப் படுதல் வேண்டும். உரக் களஞ்சியசாலைகள் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சகல வசதிகளையும் கொண்டிருக்கும். பாதுகாப்பான உரக் களஞ்சியம் உறுதிப்படுத்தப்படும் வகையில், தேஉசெ இல் இருந்து 1988 இன் 68 ஆம் இலக்க உர ஒழுங்குறுத்துகை சட்டத்தின் பிரகாரம் உர இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரத்தின் நிமித்தம் விண்ணப்பிக்கும் பொருட்டு தமது களஞ்சிய நிலையங்களுக்கு/களஞ்சிய சாலைகளுக்கு இறக்குமதியாளர்களால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (சுபாஅ) பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆதலால், அரசுக்கு சொந்தமான உர கூட்டுத்தாபனங்கள் தமது உரக் களஞ்சியசாலைகளுக்கு சுபாஅ ஐ பெற்றுள்ளன. மேலும், இறக்குமதி செய்யப்படும் உரத்தின் தரம் இலங்கை நியமங்களுக்கு இணங்க அளவிடப்படுதல் வேண்டும்.

8.1.2. மேலும், கலப்படமுடைய தூய்மையற்ற ஏதாவது உரத்தை பகிர்ந்தளித்தல் மற்றும் எடுத்துச்செல்லல் 1988 இன் 68 ஆம் இலக்க உர ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆகையால், அத்தகைய தூய்மையற்ற கலப்படமுடைய உரங்களின் பகிர்ந்தளிப்பு மற்றும் எடுத்துச்செல்லல் ஆகியவற்றை தவிர்த்துக்கொள்ளும் முகமாக தேஉசெ இன் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் சற்று மேலேழுந்தவாரியாக சோதனையிடுதல் வேண்டும்.

8.1.3. இதனையடுத்து, நாட்டில் உள்ள 562 கசேநி இன் ஊடாக DAD ஆல் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். ஒவ்வொரு கசேநி இற்கும் தேவைப்படும் உரத்தின் அளவு அந்த கசேநி இற்கு பொறுப்புடைய அதிகாரியான ADO ஆல் கோரப்படுதல் வேண்டும். DAD ஒவ்வொரு கசேநி உரக் களஞ்சியசாலைக்கும் சுபாஅ ஐ பெற்றுக் கொள்ள வேண்டும்.

8.1.4. இது தவிர, சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கையாக உர உறைகளிலிருந்து மேலதிகம் செல்வதையும் மற்றும் பழுதடைவதையும் தடுப்பதை உறுதிப்படுத்தும் முகமாக உர உறைகளுக்கான தகவுதிறன் பற்றி கேள்வி மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 1988 இன் 68 ஆம் இலக்க உர ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம், உரத்தின் தரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில், சகல உர உறைகளிலும் உரத்தின் வர்த்தகப் பெயரும், உற்பத்தித் தரப்பின் பெயரும், தேறிய நிறையும், ஆக்கக்கூறுகளும், போஷனை விகிதமும் அடங்கிய ஒரு அட்டை ஒட்டப் படுதல் அல்லது அச்சிடப்படுதல் வேண்டும்.

## 9. உரம் எடுத்துச்செல்லலும் கையாளுகையும்

9.1. அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் தலைமை வகிக்கும் மாவட்ட மட்ட உரக் குழு உரக் களஞ்சியத்தையும், கமக்காரர் மட்டத்தில் உர விநியோகத்தையும் கண்காணிக்கும். ஒவ்வொரு கசேநி நிலையமும் உரங்களை களஞ்சியப்படுத்துவதற்கு தனியான ஒரு உரக்

களஞ்சியசாலையைக் கொண்டிருக்க வேண்டும். "விஆஉஉ பிரிவில்" பணியாற்றுகின்ற விஆஉஉ இற்கு விவசாயிகளுக்கு மத்தியில் உரத்தை விநியோகிக்கும் பொறுப்பு உண்டு.

## 10. உரப் பாவனை பற்றிய வழிகாட்டல்கள்

10.1. **சிறந்த விவசாய செயன்முறைகளுக்கான (சிவிசெ) இரசாயன உரம்**

- உரத்தைப் பாவிப்பதன் காரணமாக இரசாயன அல்லது பௌதீக ரீதியில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதைகளின் / நடுகை மூலப்பொருட்களினதும் மற்றும் மண்ணில் சேரக்கூடிய வேறு ஏதாவது மூலப்பொருட்களின் சாத்தியத்தை தவிர்ப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். ஏதாவது பாதிப்பு அவதானிக்கப்பட்டால் அது பற்றிய பதிவுகளை பேண வேண்டும்.
- உரத்தைப் பாவிப்பதனாலும், மூலப்பொருட்கள் மண்ணில் சேருவதனாலும் ஏதாவது கணிசமான பாதிப்புகள் காணப்படுமாயின், உற்பத்தி பழுதடையும் வாய்ப்புகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- அதிக உலோகங்களால் பயிர் உற்பத்தி பழுதடைவதை குறைத்துக் கொள்வதற்காக கடின உலோகங்களின் அனுமதிக்கக்கூடிய அளவுடைய வேறு உரங்களை அல்லது வேறு மூலப்பொருட்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- மனிதக் கழிவுப் பொருட்களை உற்பத்தியில் உரமாகப் பயன்படுத்தக் கூடாது.
- உற்பத்தி வயல்களும் நீர் வளங்களும் அசுத்தப்படுவதை குறைத்துக் கொள்ளக் கூடிய வகையில் மண்ணில் சேருகின்ற ஏனைய மூலப்பொருட்களையும் உரங்களையும் களஞ்சியப்படுத்துவதற்கும், கலப்பதற்கும், இறக்குவதற்கும் என தனியான இடங்கள் இருத்தல் வேண்டும். இந்த நிபந்தனை சேதன உரங்கள் தயாரிப்பிலும் ஏற்புடைய நிபந்தனையாகும்.
- மண்ணுக்கு சேர்க்க வேண்டிய உரங்களினதும் ஏனைய மூலப்பொருட்களினதும் இடம், வைக, அளவு, கிடைத்த திகதி என்பவற்றின் பதிவுகளை பேண வேண்டும்.
- அதே விதத்தில், மண்ணுக்கு சேர்க்கப்படும் உரங்களும் ஏனைய மூலப்பொருட்களும் தொடர்பான பாவனைத் திகதி, மூலப்பொருள் பாவனை, பாவனை இடம், பாவனை முறை, இயக்கு தரப்பின் பெயர் என்பவற்றின் பதிவுகளையும் பேண வேண்டும்.
- விவசாயத் திணைக்களம் வழங்கிய உர சிபாரிசின் அடிப்படையில் உரத்தை பாவிக்க அல்லது மண்ணை பரிசோதனை செய்த பின்னர் உரத்தை பாவிக்க வேண்டும். இந்த விதத்தில் பாவித்தால் போஷனை இழப்புகளை தவிர்த்துக் கொள்ளலாம்.
- மண்ணின் வளத்தை பேணும் பொருட்டு இரசாயன உரங்களுக்கு மேலதிகமான, அங்கீகரித்த தர நியமம் உடைய சேதன உரங்களையும் பாவிக்க வேண்டும்.
- இரசாயன உர செலவுகளை குறைத்துக் கொள்ளும் பொருட்டு கூடுமானவரை எல்லா நேரங்களிலும் ஒன்றிணைந்த மண் வள முகாமைத்துவ முறையியலைப் பிரயோகிக்க வேண்டும்.
- உரங்களைப் பாவிக்கின்ற போது எப்பொழுதும் கையுறைகளையும் மற்றும் கால் சப்பாத்துக்களையும் அணிந்து கொள்ள வேண்டும்.

## 11. கண்காணிப்பும் மதிப்பீடும்

11.1. அரசாங்கத்தின் உரப் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை சுமுகமாக முன்னெடுக்கும் பொருட்டு உரிய நேரத்தில் தகவல்களையும் மற்றும் அறிக்கைகளையும் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். உரங்களை விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒரு நிறுவனம் அல்லது நபர் ஒருவர் 1988 இன் 68 ஆம் இலக்க உர ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவுக்கு இணங்க தேஉசெ இன்

பணிப்பாளர் குறிப்பீடுசெய்த தகவல்களை அல்லது அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு கடமைப்பட்டுள்ளது/கடமைப்பட்டுள்ளார்.

11.2. பயிர்ச் செய்கை காலத்தில் உரங்கள் விநியோகம் நிறைவடைந்த நாளிலிருந்து ஒரு வார காலத்திற்குள், சகல விஆஉஉ களும், அந்த உத்தியோகர்கள் பணியில் அமர்த்தப்படாத பிரதேசங்களில் உரிய உத்தியோகத்தர்களும் உரத்தை கொள்வனவு செய்த /பெற்றுக் கொண்ட விவசாயிகளின் பெயர்களும் மற்றும் அவர்கள் கொள்வனவு செய்த/பெற்றுக் கொண்ட உரங்களின் அளவுகளும் அடங்கிய ஒரு பட்டியலை தயாரித்து, பொதுமக்கள் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் தமது அலுவலங்களிலும், கிஉ அலுவலகங்களிலும், கஅ களின் தலைவர்களது வதிவிடங்களிலும், மகாவலி அதிகாரப் பிரதேசங்களில் வரும் பிரிவு முகாமையாளர்களின் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட அந்தப் பட்டியல் தொடர்பாக எழுப்பக்கூடிய பொதுவான ஆட்சேபனைகளை முறையான விசாரணையின் நிமித்தம் பிரதேச செயலகத்திற்கும் மற்றும் மாவட்ட செயலகத்திற்கும் பிரதிகளுடன் கஅதி இன் பாநா நாயகத்திற்கு குறிப்பீடுசெய்வதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

11.3. கசேநி கள், ஒவ்வொரு உரப் பெறுகை முடிவிலும் கையிருப்பிலுள்ள உரங்களின் நிலை பற்றி, தேஉசெ இன் மாவட்ட உதவிப் பணிப்பாளருக்கும் ஒரு பிரதியுடன், பின்னிணைப்பு 12 இன் ஊடாக, ஒவ்வொரு திங்கட்கிழமை நாளிலும், மு.ப. 9.00 மணியளவில், கஅதி இன் மாவட்ட பிஆ/உஆ இற்கு அறிக்கையிடுதல் வேண்டும். மாவட்டத்திற்கு பொறுப்புடைய கஅதி இன் பிஆ/உஆ மற்றும் தேஉசெ இன் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோர் உர விநியோகம் பற்றிய வாராந்த அறிக்கையை பின்னிணைப்பு 13 இன் ஊடாக, தேஉசெ இன் பணிப்பாளருக்கும் ஒரு பிரதியுடன் கஅதி இன் பநா இற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

11.4. உர விநியோக நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படும் பிராந்திய மட்டம் முதல் தேசிய மட்டம் வரையான சகல முகவர்நிலையங்களும், அடுத்து வரும் மாதத்தின் 05 ஆம் திகதி முடிவடைய முன்னர், தமது பொறுப்புக்களின் நோக்கெல்லை தொடர்பான ஒரு மாதாந்த முன்னேற்ற அறிக்கையை தமது மேற்பார்வை அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

11.5. உர பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படுகின்ற உள்ளூர் மட்ட அலுவலர்கள் அனைவரும் உர விநியோக முன்னேற்றத்தை காண்பிக்கின்ற அறிக்கைகளை பிராந்திய விவசாயக் குழுவுக்கு (பிவிகு) சமர்ப்பிக்க வேண்டும்.

11.6. உர விநியோக நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படுகின்ற மாவட்ட மட்ட அலுவலர்கள் அனைவரும் உர விநியோக முன்னேற்றத்தை காண்பிக்கின்ற அறிக்கைகளை மாவட்ட விவசாயக் குழுவுக்கு (மாவிகு) சமர்ப்பிக்க வேண்டும்.

11.7. ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போக முடிவிலும், பயிர் அறுவடைசெய்யும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்திலும் தேசிய பொருளாதாரத்திலும் உரங்களின் தாக்கம் பற்றி ஒரு மாத காலத்திற்குள் மதிப்பிட்டு அவதானிப்புகளை சமர்ப்பிப்பதற்கு உரங்களுக்கான பிவிகு நடவடிக்கை எடுக்குமாயின், அது பயனுள்ளதாகவிருக்கும்.

11.8. ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகத்திலும் உரங்கள் கிடைத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் பற்றிய ஒரு மதிப்பீட்டு அறிக்கை, மாவட்டத்திற்கு பொறுப்புடைய கஅதி இன் பிஆ/உஆ ஆல் தமது மாவட்டத்தின் ஒவ்வொரு கசேநி நிலையத்தையும் கருத்திற்கொண்டு, மாவட்ட செயலாளருக்கும் மற்றும் கஅதி இன் பநா நாயகத்திற்கும் பிரதிகளுடன் கஅதி இன் பநா இற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11.9. உரங்களின் தேவைப்பாட்டுக் கணிப்பீடு, உர விநியோகம், உரப் பாவனை, கண்காணிப்பு என ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டமும், இலக்குக்கொள்ளப்பட்ட பலன்கள் வெற்றிகரமாக அடையப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் முமகமாக மாவட்ட உரக் குழுவினால் நெருங்கிக் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

11.10. எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்துகொள்ள தமது மாவட்டங்களுக்கான உரங்களின் கேள்வியையும், பகிர்ந்தளிப்பையும் கண்காணிப்பது கஅதி இன் மாவட்ட பிஆ/உஆ இன் நேரடிப் பொறுப்பாகும்.

11.11. உர விநியோக நிகழ்ச்சித் திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்துவது தேஉசெ இன் உதவிப் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

11.12. குறித்த நிகழ்ச்சித் திட்டத்தையும் அதே போல் பிவிகு இல் விரிவாக ஆராய வேண்டிய இந்த சகல விடயங்களையும், மீளாய்வுகளையும் பிரதேச செயலகங்கள் மேற்பார்வை செய்யக்கூடியதாக இருக்குமாயின், மிகவும் பொருத்தமானதாகும்.

11.13. உரம் சரியான நேரத்தில், சரியான அளவில், சரியான விலையில் சரியான விவசாயிக்கு விநியோகிக்கப்படுகின்றதா என்பதை உறுதிசெய்யும் பொருட்டு கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நோக்கங்களில், விவசாயிகளின் மனத்திருப்தியை டிஜிட்டல் சாதனத்தின் ஊடாக கண்காணித்து அளவிடுவதற்கு, உரங்கள் விநியோகிக்கப்படும் போது விஆஉஉ / பொருத்தமான உத்தியோகத்தர் மூலம் சகல விவசாயிகளும் நேர்காணப்பட வேண்டும்.